

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.12.2025) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள ஜெர்மன் நாட்டுத் துணைத் தூதர் மைக்கேல் ஹாஸ்பர் (Michael Hasper) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், ஜெர்மன் நாட்டுத் துணைத் தூதரக மரபு அலுவலர் டேனியல் மனோகரன், இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் சென்னை தலைவர் எஸ்.விஜயகுமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (18.12.2025) அமைச்சர் துரைமுருகன் அவர்களை கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியாறு உபவடிநிலம் வேட்டைக்காரன்புதூர் கால்வாய் ஒடையகுளம் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் நிர்வாகிகள் சந்தித்து புதுதில்லியில் ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகம் சார்பில் நடைபெற்ற 6–வது தேசிய நீர் விருதுகள் விழாவில் இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் தங்களின் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ”நீரினை சிறந்த முறையில் பயன்படுத்துவோர் சங்கம் விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றனர். இச்சந்திப்பின்போது, நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சு.கோபாலகிருஷ்ணன், நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர் (கோயம்பத்தூர் மண்டலம்) S.முருகேசன் மற்றும் நீர்வளத் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தானர்



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2025) சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை திறந்து வைத்து, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தயாரிப்பு பொருட்களைப் பார்வையிட்டார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2025) சென்னை நுங்கம்பாக்கம், அன்னை தெராசா மகளிர் வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை திறந்து வைத்து, மதி அனுபவ அங்காடிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வாங்கிடும் வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வாடிக்கையாளர் அட்டைகளை அறிமுகப்படுத்தினார்.

## சென்னையில் டிசம்பர் 18 ஆம் தேதி தொடங்கி, ஜனவரி 4 ஆம் தேதி வரை நடைபெறுகிறது:

# தமிழ்நாடு மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பல்வேறு பொருட்களின் சிறப்பு விற்பனைக் கண்காட்சி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை,டிச.19-**

**சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகேயுள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக்குழுவினரின் தயாரிப்புகள் அடங்கிய `மதி கிறிஸ்துமஸ் - ஆங்கில புத்தாண்டு - பொங்கல்' சிறப்பு விற்பனைக் கண்காட்சியை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.**

**அப்போது அவர், ``டிசம்பர் 18 -ஆம் தேதி தொடங்கி ஜனவரி 4-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில், அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் தயாரித்துள்ள பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பொதுமக்கள் அனைவரும் இந்தக் கண்காட்சிக்கு வருகை தந்து, மகளிர் சுய உதவிக்குழுத் தயாரிப்புகளை வாங்கி, பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்" என்று கூறினார்.**

இதைத் தொடர்ந்து பத்திரிகை நிருபர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:

பத்திரிகை நண்பர்களுக்கு வணக்கம்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்கள், பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து சிறப்பான பொருட்களைத் தயாரிக்கக்கூடிய, விற்பனை செய்யக்கூடிய சிறப்பான குழுக்களும் பங்கேற்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் விடுமுறை தினத்தை முன்னிட்டு, கண்காட்சி இங்கு நடத்தப்படும். அந்தக் கண்காட்சி இங்கே திறந்து வைக்கப்படுகிறது.

இன்று முதல் ஜனவரி 4-ஆம் தேதி வரை கிட்டத்தட்ட 18 நாட்கள் இந்தக் கண்காட்சி நடைபெறும். இதில் 72 சுய உதவி குழுக்களை சேர்ந்த 50 கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட பொருட்கள் இங்கே விற்பனைக்காக சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் மூலம் இங்கே காட்சி படுத்தப்பட்டிருக்கின்றன.

### சுய உதவிக்குழுக்கள்

ஒவ்வொரு வருடமும் இந்தக் கண்காட்சியில் விற்பனையை அதிகப்படுத்துவதற்கு நம்முடைய அரசு பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது. நம் அரசு அமைவதற்கு முன்பாக, ஒவ்வொரு ஆண்டும் பார்த்தீர்கள் என்றால், சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்கள் வருடத்துக்கு அதிகபட்சமாக 20 கோடி ரூபாய் வரை விற்பனையாகி இருந்தது. அதன் பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் திட்டத்திற்கு கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும் என்று, அவர்கள் எவ்வளவு விற்பனை செய்கின்றார்களோ, அதை மேலும் உயர்த்துவதற்காக பல முன்னெடுப்புகளை எடுத்திருக்கிறோம்.

சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் பேசும்போது, நான் குறிப்பிட்டுப் பேசினேன். இந்த வருடம் எங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய இலக்கு 600 கோடி என்று சொன்னார்கள். இதற்கு முந்தைய வருடம் கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்திருந்தோம். இந்த ஆண்டு இதுவரைக்கும் கிட்டத்தட்ட 690 கோடி ரூபாய்க்கு விற்பனை ஏற்கனவே நடந்து முடிந்திருக்கிறது. இன்னும் 3 மாதங்கள் இருக்கின்றன. எனவே, இலக்கைவிட அதிகமாக, நம்முடைய சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் அதிகமாக விற்பனை செய்திருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அடையாள அட்டைகள்

ஒரு 6 மாதங்களுக்கு முன்பு முதன் முறையாக சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் அத்தனைபேருக்கும், அவர்களின் புகைப்படம், பெயர், அவர்கள் குழுவின் பெயர் சேர்த்து அவர்களுக்கு அடையாள அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் பார்த்தீர்கள் என்றால், அவர்களுக்கு பல்வேறு சலுகைகள். அவர்கள் தயார் செய்கின்ற பொருட்களைப் பக்கத்து ஊரிலோ அல்லது பக்கத்து மாவட்டத்துக்கோ எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு போக்குவரத்துச் செலவுகள், விலையில்லாத கட்டணம், 25 கிலோ வரை இலவசமாக பேருந்தில் எடுத்துச் செல்லலாம்.

அதே மாதிரி கோ-ஆப்டெக்ஸில் சலுகைகள், ஆவினில் அவர்களுக்கு சலுகைகள் இப்படி அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் கொடுத்திருக்கிறோம். 50 இலட்சம் சுய உதவிக்குழு சகோதரிகளில், கிட்டத்தட்ட 22 இலட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கே வந்திருக்கின்ற பல சகோதரிகள் அந்த அட்டைகளை, என்னிடம் காண்பித்து, அதனால், என்னென்ன பலன் அடைகின்றார்கள் என்று பெருமையாகச் சொன்னார்கள்.

### வெகுமதி புள்ளிஅட்டைகள்

அதுமட்டுமல்ல, விற்பனையை அதிகரிப்பதற்கு, `மதி அனுபவ அங்காடிகள்' பல மாவட்டங்களில் உள்ளன. அதில் வருடம்தோறும் விற்பனையை அதிகரிப்பதற்கு, அவர்களுக்கு வெகுமதி புள்ளி அட்டைகள் (Reward point card) கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள், இது போன்ற விடுமுறை நாட்கள், பண்டிகை நாட்களில், விழா நாட்களில் மொத்தமாக வாங்கி நண்பர்களுக்கு, உறவினர்களுக்குப் பரிசளிப்பார்கள். அப்படி கொடுக்கும்போது இங்கே வந்து பார்த்து, இங்கு இருக்கக்கூடிய பொருட்களை அவர்களுடைய பட்ஜெட்டுக்கு தகுந்தாற்போல் வாங்கி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று நான் அனைவரின் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் மறைந்த இனமான பேராசியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தில்லை நகரில் உள்ள மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்க மத்திய மாவட்ட தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் , சேர்மன் துரைராஜ், மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ், கருணாநிதி பகுதி செயலாளர்கள் கமல், முஸ்தபா, மோகன்தாஸ், இளங்கோ, மண்டல தலைவர் துர்கா தேவி, ஒன்றிய செயலாளர்கள் கே.கே.ஆர். சேகரன், வீரபத்திரன் , முத்து, பழனி, கவிதா உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




கரூர் புகழிமலை பகுதியில் குடியிருப்பவருக்கு நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பட்டாக்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார். அருகில் ஆட்சியர் மீ.தங்கவேல், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. ஆர். இளங்கோ, நகர் மன்றத் தலைவர் குணசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ் உள்ளிட்டோர் அருகில் உள்ளனர்.





## 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில்,

# சிறுபான்மையினர் விரோத பாசிஸ்ட்டுகளையும் அடிமைகளையும் ஒரே நேரத்தில் வீழ்த்த, கிறிஸ்துமஸ் விழாவில் உறுதியேற்போம்!

### மதுரையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**மதுரை, டிச. 20 –**

**மதுரையில் பெந்தகொஸ்தே சபைகளின் மாமன்றம் சார்பாக நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெரு-விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துப் பேசினார்.**

**அப்போது அவர், “2026–ஆம் ஆண்டு சட்டமன்-றத் தேர்தலில், சிறுபான்மையினர் விரோத பாசிஸ்ட்-டுகளையும் அவர்களின் அடிமைகளையும் ஒரே நேரத்தில் வீழ்த்த, இந்தக் கிறிஸ்துமஸ் விழாவில் நாம் அத்தனை பேரும் உறுதியேற்போம்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

பெந்தகோஸ்தே சபைகளின் மாமன்றம் (Synod of Pentecostal Churches) சார்பில், மதுரை மாநகரத்தில் நடைபெறுகின்ற இந்த கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொள்வதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### கிறிஸ்துமஸ் தோரணங்கள்

முதலில், உங்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். Merry Christmas to Everybody Here! கிறிஸ்துமஸ் என்றாலே, வண்ண விளக்குகள், நட்சத்திரங்கள், கிறிஸ்துமஸ் தோரணங்கள் என அந்த இடமே கொண்டாட்டமாக இருக்கும். அப்படித்தான் இன்றைக்கு, இந்த விழா நடைபெறும் இடமும் கொண்டாட்டமாக, மகிழ்ச்சியாக இருக்கிறது. அனைவரும் இங்கு கூடியிருக்கிறோம். உங்கள் ஒவ்வொருவரின் முகத்தைப் பார்க்கும் போதும் மகிழ்ச்சியும் அன்பும் ஒருசேரத் தெரிகிறது.

குறிப்பாக, இங்கே கூடியிருக்கிற கிறிஸ்தவ சகோதர, சகோதரிகள் நீங்கள் என் மேல் காட்டுகிற பாசம் என்னை மிகவும் நெகிழச் செய்கிறது. இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சராக மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகவும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன்.

கிறிஸ்தவக் கொள்கைகளுக்கும் - திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும் மிகப்பெரிய வேறுபாடு கிடையாது. இரண்டுமே மனிதநேயத்தை, அன்பை, சமத்துவத்தைத்தான் மற்றவர்களிடம் போதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

உலகத்தின் எட்டுத் திசைகளிலும், எல்லா நாடுகளிலும் ஒருவருடைய பிறந்த நாள் இவ்வளவு மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது என்றால், அது இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள்தான்.

### இயேசுவின் வாழ்க்கை

இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள் என்பது வெறும் கொண்டாட்டத்திற்காக மட்டும் தானா? அதைவிட முக்கியம், அவருடைய கருத்துகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பதுதான். இயேசுவின் வாழ்க்கையில் முக்கியமான ஒன்று, அவரின் எளிமை. அவர் பிறந்ததே ஒரு மாட்டுத் தொழுவத்தில்தான்.

மக்களுக்கான தலைவர்கள் எல்லாம் எப்போதும் அரண்மனையில்தான் இருப்பார்கள் என்ற கருத்தைத் தன் பிறப்பாலேயே உடைத்தவர்தான் இயேசு கிறிஸ்து அவர்கள். அதே போல, சாதாரணப் பின்புலத்திலிருந்து வந்தவர்களால்கூட மக்கள் தலைவர்களாக உயர முடியும் என்பதை, இந்த மண்ணில் நிரூபித்துக் காட்டிய இயக்கம் திராவிட இயக்கம்.

அதற்கு எடுத்துக்காட்டு - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என எந்தத் தலைவரைப் பார்த்தாலும், அத்தனை பேருமே மக்களுடன் மக்களாக வாழ்ந்தவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் மேல் இரக்கம் காட்ட வேண்டும் என்பது, பொதுவாக எல்லோருக்கும் இருக்க வேண்டிய மனிதகுணம் என்று கிறிஸ்தவம் சொல்கிறது. அதைத்தான் திராவிட இயக்கமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், இப்போது ஒன்றியத்தில் நாட்டை ஆளுகின்றவர்களுக்கு இரக்க உணர்வுக்குப் பதிலாக, வெறுப்புணர்வுதான் அதிகமாக இருக்கிறது. குறிப்பாகத் தமிழ்நாட்டின் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் அந்த வெறுப்பு இருக்கிறது.



### மனிதகுலத்துக்கே வழிகாட்டி

இயேசு பிறந்த காலகட்டத்தில் ஆட்சி செய்த மன்னனுக்கு இரக்கமே கிடையாது. இயேசு பிறந்த செய்தியை அந்த மன்னனிடம் சொல்கிறார்கள். ``இந்த நாட்டில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது, அந்தக் குழந்தை எதிர்காலத்தில் மனிதகுலத்துக்கே வழிகாட்டியாகவும், தலைவனாகவும் உயரப் போகிறான்'' என்று சொல்கிறார்கள்.

அதைக் கேட்ட மன்னன் மகிழ்ச்சி அடையாமல் பொறாமைப்பட்டான். எங்கே தன்னுடைய ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் அந்தக் குழந்தையால் ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தான். உடனே, அந்த நாட்டில் பிறந்த இரண்டு வயதுக்கு உட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் கொலை செய்ய உத்தரவிட்டான். தன்னுடைய ஆட்சி, அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள எந்த எல்லைக்கும் போகக்கூடியவனாக அந்த மன்னன் இருந்தான். அந்த மன்னனுக்கு இருந்த பயம் மாதிரி, இன்றைக்கு இந்திய ஒன்றியத்தை ஆண்டு கொண்டிருக்கிற ஆட்சியாளர்களுக்கும் நம் தமிழ்நாட்டின் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் ஒரு பயம் இருக்கிறது. எங்கே எல்லா மக்களும் ஒன்றாகச் சேர்ந்துவிடுவார்களோ, அதனால் தங்களுடைய அதிகாரம் பறிபோய் விடுமோ என்று பயப்படுகிறார்கள்.

### தனித்துவமான மாநிலம்

மதம், மொழி, சாதியின் பெயரால் வெறுப்புணர்வைப் பரப்புகிறார்கள். இங்கே மதுரையில் உங்கள் முன்னிலையில் உறுதியாகச் சொல்கிறேன்; அவர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், தமிழ்நாட்டுக்குள் அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி எந்தநாளும் வெற்றிபெறாது. அதை தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்கவே மாட்டார்கள். ஏனென்றால், தமிழ்நாடு எப்போதுமே தனித்துவமான மாநிலம்.

மக்கள் மத்தியில் பிரிவினையைத் தூண்டி, கலவரத்தை ஏற்படுத்தி, அந்தக் கலவரத்தில் குளிர்காயலாம் என்று நினைக்கிற பாசிஸ்ட்டுகளின் நினைப்பு நிச்சயம் தமிழ்நாட்டு மக்களால் வீழ்த்தப்படும். நிச்சயம் மக்களே ஒன்று சேர்ந்து வீழ்த்துவார்கள்.

இயேசுவின் வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம், ‘பகிர்ந்து கொடுக்க வேண்டும்’ என்பது. நம்மிடம் என்ன இருக்கிறதோ அதை மற்றவர்களுக்கு உடனடியாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அந்த வழியில்தான், நம் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்கள், ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்று ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால், ஒன்றிய அரசுக்குப் பகிர்தல் என்றாலே பிடிக்காது. தமிழ்நாட்டிலிருந்து அதிக வரி வசூல் செய்கிறார்களே தவிர, அதைப் பகிர்ந்து கொடுக்கிறார்களா என்று கேட்டால், நிச்சயம் கிடையாது. மற்ற மாநிலங்களுக்கு அதிகமாகவும், தமிழ்நாட்டிற்கு மிகக் குறைவாகவும் கொடுக்கிறார்கள். இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவையோ அதை அறிந்து சரியாகச் செய்து வருகிறார். அதனால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்து விளங்குகின்ற மாநிலங்களில் முதலிடத்தில் நம் தமிழ்நாடு இடம் பெற்றிருக்கிறது.



பாசிஸ்ட்டுகள் எவ்வளவு கொடுமைகளைச் செய்தாலும், அதையெல்லாம் தாங்கிக்கொண்டு, தமிழ்நாட்டின் தனித்தன்மையை, மதச்சார்பின்மையை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, திராவிட மாடல் அரசாக இருந்தாலும் சரி, நிச்சயம் எந்த நேரத்திலும் காப்பாற்றும் என்ற உறுதியை இங்கே நான் உங்களுக்கு அளிக்கிறேன்.

### பாதுகாப்பு அரண்

சிறுபான்மை மக்களுக்கும் கழகத்திற்குமான பந்தம் இன்றைக்கு நேற்றல்ல, நீண்டகாலமாக இருக்கும் பந்தம். நமக்குள் இருக்கக்கூடிய உறவு ஒரு கொள்கை உறவு. அதை யாராலும் பிரிக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம், கிறிஸ்தவ மக்களுக்கும், இஸ்லாமியர் உட்பட அனைத்துச்சிறுபான்மையின மக்களுக்கும் என்றைக்குமே ஒரு பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்திருக்கிறது.

குறிப்பாக, இந்த நான்கரை ஆண்டுகளில் நம்முடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்துள்ளார்கள். கிறிஸ்தவர்கள் உட்பட சிறுபான்மையின மாணவர்கள் ஒரு லட்சம் பேருக்கு, கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 7 கோடி ரூபாய் அளவுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவத் தேவாலயங்களில் பணிபுரிகின்ற பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் தொகை ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

> **சிறுபான்மை மக்களுக்கும் கழகத்திற்குமான பந்தம் இன்றைக்கு நேற்றல்ல, நீண்டகாலமாக இருக்கும் பந்தம். நமக்குள் இருக்கக்கூடிய உறவு ஒரு கொள்கை உறவு. அதை யாராலும் பிரிக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம், கிறிஸ்தவ மக்களுக்கும், இஸ்லாமியர் உட்பட அனைத்துச் சிறுபான்மையின மக்களுக்கும் என்றைக்குமே ஒரு பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்திருக்கிறது.**

வாரிய உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை 20 ஆயிரமாக இருந்தது. உங்களுடைய கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அதை 30 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல வாரிய உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்குக் கல்வி உதவித்தொகையாக மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்துச் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கும் நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கிறிஸ்தவ மக்கள் ஜெருசலேமிற்குப் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு மானியமாக 37 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதே போல, கன்னியாஸ்திரிகளுக்கு 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 44 தேவாலயங்கள் இன்றைக்குப் புனரமைக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு கோயம்புத்தூரில் வைக்கப்பட்ட கோரிக்கைகளை எல்லாம் நம்முடைய அரசு நிறைவேற்றி வருகிறது.

இன்றைக்கு இந்த மேடையிலும் பல கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள். நிச்சயம் உங்களுக்கு அந்த நம்பிக்கையை நான் தருகிறேன். அடுத்த வருடம் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டு, உங்களையெல்லாம் தைரியமாக இதே கிறிஸ்துமஸ் விழாவில் சந்திப்பேன்.

இப்படிச் சிறுபான்மையின மக்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு என்றைக்கும் பக்கபலமாக இருக்கும். நீங்களும் நம்முடைய அரசுக்கு என்றைக்கும் பக்கபலமாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### மக்களுடைய ஒற்றுமை

இன்றைக்குக் கிறிஸ்துமஸ் கொண்டாட, கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்ள, உங்களைச் சந்திக்க இங்கே வந்திருக்கிறேன். அதேமாதிரி ரம்ஜான் வந்தால், நீங்களும் நானும் இஸ்லாமியச் சகோதரர்களைச் சந்தித்து, நம் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வோம். தமிழர்கள் என்ற உணர்வோடு பொங்கல் விழாவையும் நாம் அத்தனை பேரும் சேர்ந்து ஒன்றாகக் கொண்டாடுவோம். இதுதான் தமிழ்நாடு. இதுதான் தமிழ்நாட்டு மக்களுடைய ஒற்றுமை. இந்தச் சகோதரத்துவம், சமத்துவம், சமூக நீதி, மதச்சார்பின்மை ஆகியவைதான் நம்முடைய தமிழ்நாட்டின் அடையாளங்கள்.

ஆகவே, இங்கே கூடியிருக்கும் கிறிஸ்தவப் பெருமக்களே, உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்வது, வெறுப்புப் பிரச்சாரங்களைப் புறந்தள்ளி, பொய்ப் பிரச்சாரங்களைத் தவிர்த்து, பிளவுவாதங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நம் தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், சிறுபான்மையினர் விரோத பாசிஸ்ட்டுகளையும் அவர்களின் அடிமைகளையும் ஒரே நேரத்தில் வீழ்த்த, இந்தக் கிறிஸ்துமஸ் விழாவில் நாம் அத்தனை பேரும் உறுதியேற்போம் என்று கூறிக்கொண்டு, அனைவருக்கும் மீண்டும் என் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் பி.மூர்த்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் தளபதி, மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேசன், பூமிநாதன், மாநகரத் துணை மேயர் நாகராஜ் பேராயர் டேவிட் பிரகாசம், பிஷப் கே.பி.எடிசன், பாஸ்டர் ஜான்சன் பாண்டியன், பாஸ்டர் ஜோயல் சேகரன், பாஸ்டர் ஜோ.டேவிட், மதுரை பேராயர் பிஷப் டெட்லி தங்கையா, பாஸ்டர் சசி சுகாதியா, பாஸ்டர் இஸ்ரேல் டேனியல், இம்மானுவேல் ஜெயராஜ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் ஜி.பி. ராஜா, இன்பா ரகு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாமுவேல் செல்லப்பாண்டியன், மாநகராட்சி சுகாதாரக் குழுத் தலைவர் ஆத்திக்குளம் ஜெயராஜ், பகுதிக் கழகச் செயலாளர் மதன் செல்வம், வட்டச் செயலாளர் பாலசிவக்குமார், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் இளங்கோ உள்பட பலரும் கலந்துகொண்டனர்.